


# தேவதாயின் குரல்

"இறுதியில் எனது மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்"

FOR PRIVATE CIRCULATION ONLY

குரல்: 14 யாழ்ப்பாணம் ஜனவரி 1998


## ஒன்றிணைக்கும் ஆவி - அனலா..? வாளா...?

ஆசிரியர் உரை:

தூய ஆவியின் வருடமாகிய 1998ல், கிறிஸ்தவ ஒன்றிப்பு எத்தனை அர்த்தங்களைத் தருகின்றதென்பது, சபைகளை ஆக்குகிறவரும், சபை பாவத்தில் தோய்ந்திருந்தால் அழிக்கிறவருமான தூய யேசுவின் ஆவிக்கு நன்கு தெரியும். முதலில் சபையை உருவாக்குபவர் யேசுவின் விலாவிலிருந்து புறப்படுகிற தூய ஆவியே. இவர் ஊடுருவப்பட்டவரின் விலாவிலிருந்து - அன்பு இதயத்திலிருந்து புறப்படும் இரத்தமும் நீருமாக குறியிடப்படுகிறார்.

ஒருவன் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி, இறையாட்சிக்கு உட்பட இயலாது (யோவா 3;5) நீரின் அடையாளத்தை, ஆவியின் சுனையாக வைத்துக்கொண்டே சபைகள் உருவாகின்றன. அது முழுக்கு ஞான தீட்சையா, ஊற்றி வார்த்த ஞான தீட்சையா என்ற சர்ச்சை பல சபைகளிடையே நிலவினும், இரண்டும் பாரம்பரியங்களில் ஊன்றப்பட்டவையே.

திருமுழுக்கு கொடுப்பதற்கு அல்ல, நற்செய்தியை அறிவிக்கவே கிறிஸ்து என்னை அனுப்பினார்' (1 கொரி 1:17) என்ற பவுலின் கூற்று முக்கியமானது. சபைகளுக்கு இன்று தேவையானது இரத்தத்தினால் பெறவேண்டிய ஞான தீட்சையின் முக்கியத்துவத்தை உணர்வதே. 'ஆயினும் நான் பெறவேண்டிய ஒரு திருமுழுக்கு உண்டு' (லூக் 12:50) என்று யேசு கூறவில்லையா? அது சிலுவையில் அவர் பெற்ற ஞானதீட்சை அல்லவா? அதனாலேயே பவுல் 'நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றியே பறைசாற்றுகிறோம்' (1 கொரி 1:23) என்கிறார்.

சபைகள், முழுக்கு ஞானதீட்சை கொடுத்தாலென்ன? தெளிப்பு ஞான தீட்சை கொடுத்தாலென்ன? அது இரத்த சாட்சியத்திற்கு இட்டுச் செல்கிறதா என்பதை முதலில் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

சிலுவையில் இரத்த தீட்சைபெற ஆவல் கொண்டோர், ஆவியின் பொழிவுக்குள் நிச்சயம் வருவர். ஆவி தரும் ஐக்கியத்தினுள் வந்து சுகித்திருப்பர். அவர்களது மகிழ்ச்சியை யாரும் அவர்களிடமிருந்து பிரிக்கமாட்டார்.

உலக திருச்சபை சம்மேளனமும் (W. C. C.) கத்தோலிக்க திருச்சபையும், இவ்விரு பாரிய அமைப்புகட்கு வெளியே விளிம்பில் நிற்கும் 28,000 அடிப்படைவாத கிறிஸ்தவ குழுக்களும், கிறிஸ்துவின் மறையுடலே. 'தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் இயேசுவே,' ஆண்டவரெனச் சொல்ல முடியாது' (1 கொரி 12;3) இச்சபைகள் அவரின் மகிமையான உடலின் காயங்கள். அவை, புரையோடிவிட்ட புண்களா? பிரகாசமான காயங்களின் வடுக்களா என்பது ஒவ்வொரு திருச்சபையும் ஆவியின் உந்துதலில் தம்மை ஆய்வு செய்து, மன்னிக்கும் அன்புக்குள்ளும், ஆவியில் யாத்திரை செய்தும் உண்மைக்குள் கண்டுகொள்ளும்.

'இனி மெய்யடியார்கள் ஆவியிலும் உண்மையிலும் பிதாவைத் தொழுவார்கள்' (அரு 4;23)

பழைய ஏற்பாட்டின் டான், பெத்தேலா, அல்லது யெருசலேமா, புதிய ஏற்பாட்டில் சமாரியாவின் கெரசிம் மலையா, யெருசலேமா என்பதல்ல சர்ச்சை, வந்துகொண்டிருக்கும் தெய்வீக யெருசலேமிற்கு, யார் பாத்திரவாளிகள்? யார் அதை உற்று நோக்கி இன்றும் ஆவலுடன் நடபவர் என்பதே முக்கியம்.

1ம் நூற்றாண்டின் திருச்சபை வரலாறே துண்டுபடும் சபைகளின் பிரச்சனையுடன் தொடங்குகின்றது. 'யோவானின் உலகம்' என்பதை ஆய்வாளர் ஜெயபாலன் அடிகள் சுட்டிக் காட்டுகின்றார். வரலாறு பூராக பிளவுகள், பிரிவினைகள், பிரச்சனைகள், மிக முக்கியமாக 5ம் 6ம் நூற்றாண்டில் எகிப்திய, எத்தியோப்பிய பின் பாரசீக, சிரிய திருச்சபைப் பிரிவினைகள், 13ம் நூற்றாண்டில் கிரேக்க, ருசிய பிரிவினைகள், 16ம் நூற்றாண்டில் லூதர், கல்வின், கிரான்மர் பிரிவினைகள் என்பன திருச்சபை வரலாற்றின் வடுக்கள். பணபலம், உலக அந்தஸ்து, அதிகாரம், மேட்டிமை என்பவற்றின் ஒட்டுமொத்த பாவமே பிரிவினை வேர்கள்.

பின் 18ம், 19ம் நூற்றாண்டுகளில் எழும் பதித, புரட்டஸ்தாந்த சபைகளின் உட்பிளவுகள், பல சுவிசேஷ மாற்றங்கள் வேண்டி எழுந்தவை. 20ம் நூற்றாண்டின் பொருள் முதல்வாதம், நாத்திகம், நுகர்பொருள் வாதம் முதலியன, லௌகீக சேற்றுள் சபைகள் சறுக்கி உள்ளிட, நற்செய்தி அடிப்படைவாத போக்குகள், செபம், தபம், உலகமறுப்பு, ஒருவகை, ஆதித் திருச்சபை வன பிதாக்களின் போக்குகளை கடைப்பிடிக்கும் தன்மை கொண்ட சிறு கிறிஸ்தவ சபைகள் சவாலாக எழும்பின.

அணுவிச்சு அழிவின் விளிம்பிலும், மனித பேராசை, பணவாசை உருவாக்கும் இயற்கை சூழல் எயிட்ஸ் அழிவின் முன்னும் உலக போர்களின் அழிவிலும் யேசுவின் 2ம் வருகையின் அடையாளங்களைக் கிறிஸ்தவ குழுவினரும், இவற்றின் முன் தம் பணப்பெருமை, அதிகாரப்போக்கு, அமைப்பின் பக்க பலத்தோடு, உலகமாய்கைகளிலமிழ்ந்தி, சுவிசேஷத்தை, செபத்தை, பிதாவின் முகத்தை, சிலுவையின் பேறு பலன்களை மறந்து, உலகமயமாகும் சபைகள் தங்களை ஆய்வு செய்வது அவசியமான ஒரு மீளாய்வுப் பயிற்சியாகும்.

ஒன்று சேருவோம் என்ற கோஷத்தை கீழே போட்டுவிட்டு, ஓரிரு நூற்றாண்டுகட்குள்ளேயே நான்காக இருந்த சபை

(6ம் பக்கம் பார்க்க)

# மனச்சாட்சியின் கைதி சூரெக் (முன் தொடர்ச்சி)

சூ ரெக் அடிகளின் அன்புப்பணிகள் பற்றி ஒரு பிரமுகர் எழுதிவைத்த குறிப்புகளிலிருந்து சில வரிகள் இதோ:-

'அன்னையை அண்டிச் செல்லுங்கள்' என்பதே அவர் அடிக்கடி கூறும் அறிவுரை. மரியன்னையின் மட்டில் அவர் மிகுந்த பக்தியுடையவராயிருந்தார். எம் மனைவருக்கும் அன்னையாக அவளை ஏற்படுத்தியதன்மூலம் எம்மெல்லோரையும் சகோதரராக்கிவிட்டார். இவ்விதமே முழு மறைமாவட்டத்தையும் அன்னையின் அரவணைப்பில் ஒன்றிணைத்தார்.'

துப்பாக்கிமுனைகளை விட பேனா முனைகள் உலகில் அதிகம் சாதித்துள்ளன. தாம் கைக்கொண்ட பணிக்கு முழுமையான உருக்கொடுத்து அதை நிறைவேற்ற பிரான்சிஸ் பேனாவையும் தவறவிடவில்லை.

6ம் சின்னப்ப பாப்பிறையினதும், 2ம் அருள் சின்னப்ப பாப்பிறையினதும் அரிய ஆன்மீக உரைகளை சீன மொழியில் பெயர்த்து அளித்தார். செபமாலைத் தியானங்கள், ஆன்மீக வழிகாட்டி உரைகள் பலவற்றையும் எழுதியுள்ளார். அவரது எழுத்தோவியங்களில் அன்னை மரியாள் பற்றிய நூல்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. தமது சிறை அனுபவங்களை 'துன்பங்கள்' என்ற தலைப்பில் ஒரு தொகுப்பு நூலாக வழங்கியுள்ளார். விஞ்ஞானத்துக்கும் ஆன்மீகத்துக்குமிடையே தொடர்புகளை ஏற்படுத்த அயராதுழைத்த விஞ்ஞான அறிவியலாளர்களின் வரலாறுகளையும் அவர்களது ஆய்வு விளக்கங்களையும் பற்றி பிரான்சீஸ் பல நூல்களையும் வெளியிட்டார்.

'என் மந்தையில் சேரவேண்டிய ஆடுகள் பல உண்டு' எனக் கூறியவண்ணம் இரவுபகலாக ஓய்வொழிச்சலின்றி மேய்ப்புப்பணியில் ஈடுபட்ட சூ ரெக் அடிகளார்மீது செஞ்சீன அரசின் பார்வை விழுந்தது.

1953 யூன் நள்ளிரவில், அழைக்கப்படாத விருந்தாளிகள் சிலர் அவரிடம் வந்தனர். அவரது இல்லம் சோதனையிடப்பட்டது. அரசினால் தடை செய்யப்பட்ட சில மரியாயின் சேனைப் பிரசுரங்கள் கண்டெடுக்கப்பட்டன. அடிகளார் கைது செய்யப்பட்டார். ஏழு ஆண்டுகள் விசாரணை எதுவுமின்றி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

1960 மார்ச் 12ல் நீதிமன்றம் பிரான்சீஸ் சூ ரெக் அடிகளை தேசத்துரோகி எனத் தீர்ப்பளித்து 20 வருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கியது. ஆம், கத்தோலிக்க விசுவாசத்தில் உறுதியாக இருந்ததால் கிடைத்த பரிசு இது.

1975ல் சூ ரெக், மற்றும் பல அரசியற் கைதிகளுடன் 'அன்கி' மாகாணத்தில் அமைந்திருந்த 'வைற்லேக்' தொழில் முகாமுக்கு அனுப்பப்பட்டார். இங்குதான் இவரைப் போன்ற ஆயிரக்கணக்கான கோதுமை மணிகள் விழுந்து மடிந்து தம்போல் ஆயிரமாயிரம் பயிர்களை உருவாக்கின.

செஞ்சீனச் சிறைகளில் அரசியற் கைதிகளுக்கு, சிறப்பாக கத்தோலிக்க குருக்களுக்கு அளிக்கப்படும் தண்டனைகட்கு அளவுகணக்கு கிடையாது. சூ ரெக் அடிகள் இத் தண்டனைகளால் ஆன்மீக உத்வேகம் பெற்றார். அந்த உத்வேகத்தால் உந்தப்பட்டு, சொல்லொணாத வேதனைகள் மத்தியிலும் தம் குருத்துவக் கடமையை – மேய்புப் பணியைத் தொடர்ந்தார்.

சிறையில் ஒருவர் உடல்ரீதியாக மட்டுமல்ல, உள ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் துன்புறுகிறார். அங்கு ஆயனற்ற ஆடுகளாக அவதியுறும் கைதிகளின் ஆன்மீகத் தேவைகளை அடிகள் வெற்றிகரமாக நிறைவேற்றினார்.

அரசியற் கைதிகட்கு பகல் முழுவதும் ஓய்வொழிவின்றி கடுமையான வேலை. இரவில் நெடுநேரம் கட்டாய அரசியல் சித்தாந்த வகுப்புக்கள். எனவே பல கைதிகள் உலகியல் தேவைகட்காக, உள உடற் தாக்கங்களிலிருந்து விடுபட, விசுவாசத்தை இழந்தாவது விடுதலை பெற முயன்றதில் வியப்பேதுமில்லை.

எனவே சூ ரெக் போன்ற சில குருக்கள், அபாயங்கள் மத்தியிலும், களைப்பு தண்டனைகளிடையிலும் விசுவாசிகட்கும், ஏனையோருக்கும் அவர்களது உடல், உளத் தேவைகளில் விரைந்து சென்று உதவினர்.

இக் காலகட்டத்தில் சீனாவின் பொருளாதாரம் மிக மோசமாக வீழ்ச்சியடைந்தது. எனவே கைதிகளின் உணவு விகிதம் பெருமளவு குறைக்கப்பட்டது. கட்டாய வேலைப்பளுவும் பற்றாக்குறை உணவும் கைதிகளை பயங்கரமாக பாதித்தது. அடிக்கடி மரண ஓலங்கள் எழுந்தன.

இவ்வித அவலச் சாவுகளை அடிகளார் தேடித்திரிந்து இறுதி அருட்சாதனங்களை அளித்து ஆறுதல் கூறிப் பிரார்த்தித்து அவர்களது இறுதிப் பயணத்தில் துணைபுரிந்து வந்தார். தாம் வெளியில், பங்குத் தளங்களில் நடத்திய அயராத மறைப்பணியை, அதே உத்வேகத்துடன் சிறையிலும் நடத்தியமை உண்மையிலேயே பாராட்டுக்குரியது.

30 ஆண்டுகள் கடூழிய சிறைவாசத்தின் பின் சூரெக் அடிகட்கு விடுதலை கிடைத்தது. அவரைப் போலவே அவரது சகோதரர்களும், கத்தோலிக்க விசுவாசத்தை ஏற்றுக்கொண்டதற்காக – உறுதியாய் நின்றதற்காக கைது செய்யப்பட்டு, கடுங்காவலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களும் இப்போது விடுதலை பெற்று வீடு திரும்பியிருந்தனர். எனவே வீட்டில் பெரும் கலகலப்பு. குடும்பம் முழுவதுமே மகிழ்ச்சியால் குதூகலித்தது.

கண்ணொளி இழந்து, தலை நரைத்து, தள்ளாடும் வயதில் மாட்டீனா சூ இருந்தாள். விசுவாசம் மிக்க அந்த வீரத் தாய், கட்டிளம் காளைகளான தன் புதல்வர்களை, செபமாலை என்னும் வாளுடனும், அறிவுரைகள் என்னும் கேடயத்துடனும் விசுவாசப் போருக்கு அனுப்பியிருந்தாள். வெற்றி வீரர்களாக அவர்கள் திரும்பியதையிட்டு மகிழ்ச்சியடைந்தாள்.

ஆயினும் அவளது மகிழ்ச்சி அதிக நாட்கள் நீடிக்கவில்லை என்பதை இக் கட்டுரையின் ஆரம்பத்தில் வாசகர்களே அறிவர். பிரான்சீசும் அவரது சகோதரரும் மீண்டும் கைதுசெய்யப்பட்டு பழைய தொழில் முகாம்களுக்கே அனுப்பப்பட்டனர்

இரைதேடச் சென்ற பறவைகள், தம் கூட்டுக்கு திரும்பிவந்து, சிறிது இளைப்பாறியபின் மீண்டும் இரை தேடச் செல்வதுபோல் சூ குடும்பத்துக்குரிய பறவைகளும் ஆன்ம தாகத்தால் அலைந்து திரிந்தன. சில நாட்கள் வீட்டில் வந்து தங்கியபின் மீண்டும் சென்று விட்டன. தாய்ப்பறவை மட்டும் இயலாத காரணத்தால் வீட்டில் தரித்திருக்கிறாள்.

பிரான்சிஸ் மீண்டும் தமது முன்னைய தொழில் முகாமுக்கு வந்து சேர்ந்தார். அதிகமதிகமாக ஆன்மீக பணியில் ஈடுபடுவது என உறுதிகொண்டார். 'எனக்காக இன்னும் பலவருடங்கள் தரப்படும் என நான் நினைக்கவில்லை. எனவே எனக்குக் கிடைக்கும் பொன்னான மணித்துளிகளை மறைபணிக்காகவே செலவிடவேண்டும். ஒளி இருக்கும்வரை கடுமையாக வேலை செய்வோமாக' என்ற

(6ம் பக்கம் பார்க்க)

# "அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு"

## (ஒரு எயிட்ஸ் நோயாளர் பராமரிப்பு இல்லத்தின் கதை)

'இதன்பின் நான் ஒரு காட்சி கண்டேன். நடுவானில் பறந்து கொண்டிருந்த கழுகு ஒன்று உரத்த குரலில் 'மற்ற மூன்று வானதூதர்களும் எக்காளங்களை இதோ முழக்கவிருக்கிறார்கள். அந்தோ, உலகில் வாழ்வோருக்கு கேடுவரும்! ஐயகோ' என்று கத்தக் கேட்டேன். (திருவெ. 8:13)

எயிட்ஸ் என்ற பயங்கர உயிர்கொல்லி நோய் வரப்போகும் ஆண்டுகளில் ஆசிய நாடுகளில் பேரழிவு நோயாக மாறும். ஏற்கனவே ஆசியாவில் 5.3 மில்லியன் பேர் HIV எயிட்ஸ் கிருமிகளை காவுகின்றனர். தைலாந்தில் நூற்றுக்கு 2·1 வீதமும், கம்போடியாவில் 1·9 வீதமும், பர்மாவில் 1.5 விதமும் இது பரவியுள்ளது. இலங்கையிலும் ஏறத்தாழ 5000 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

தென்னமெரிக்காவில் பிறேசில் நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவர் ஒருவர், தன்னில் தொற்றிய இப் பயங்கர நோயை எவ்விதம் அருள்வடிகாலாக மாற்றினார் என்பது பற்றியும், எயிட்ஸ் நோயாளரைப் பராமரிக்க, அந்நோயாளி நிறுவிய 'ஆவியும் வாழ்வும் இல்லம்' பற்றியதுமான கதை இது.

கார்லோஸ் பொம் என்பவனுக்கு 32ம் வயதில் எயிட்ஸ் நோய் தொற்றிவிட்டது. விளைவு? தலையில் ஒரு கட்டி தோன்றி 'கார்போசி சார்கோமா' உடல் முழுவதிலும் பரவ, சாவை நோக்கி விரையும் நிலையில் 1992 மார்ச் மாதத்தில், மருத்துவர்களால் கைவிடப்பட்டு, மருத்துவமனையை விட்டு வெளியேற்றப்பட்டான். ஆறுமாத காலத்துக்குமேல் அவன் உயிர்வாழமாட்டான் என அறிவிக்கப்பட்டது. தற்கொலை செய்யலாமா என்ற நிலையில்தான் அவன், டானியேல் சிமிற்றான் என்ற குருவைச் சந்தித்தான். அவனைப்போன்று, எயிட்ஸ் நோயால் மரணித்துக் கொண்டிருந்த சான்ரா என்ற பெண்ணைப் பாராமரிக்கும்படி குருவானவர் கூறினார்.

கார்லோஸ் அந்நோயாளியைத் தனது சொந்தச் சகோதரி போன்று கவனிக்கத் தொடங்கினான். தூங்கும்போது கூட தன் பெருவிரலில் நூல் ஒன்றைக் கட்டி, உதவி தேவையெனில் நூலை இழுத்துத் தன்னை அழைக்கச் செய்தான். இருமாதங்களின் பின் அந்த எயிட்ஸ் நோயாளி சான்ரா மனநிறைவோடு மரித்தாள்.

அவளது இறுதிச்சடங்கில், கார்லோஸ் செலுத்திய இதய அஞ்சலி உருக்கமானது. அவனது உள்ளத்தின் உணர்வலைகளை எடுத்துக்காட்டியது.

'என் வாழ்வு முழுவதும் அன்புக்காக அலைந்தேன், நான் அதைக் கண்டறிந்துவிட்டேன் என நினைத்தேன். முடிவில் எல்லாவற்றையும் இழந்து விட்டேன் என உணர்ந்தேன். எனவே தற்கொலை செய்ய முனைந்தேன். அப்போதுதான் சான்ராவைப் பராமரிக்கச் சென்றேன். எனக்கு நன்றிகூடச் சொல்ல முடியாத வாய்பேசாத நிலைக்கு அவள் வந்திருந்தாள். அவள் அருகில் நின்று என்னால் முடிந்த அளவு பாசம் மிகுந்த அன்பை அவளுக்குக் கொடுத்தேன். நான் என் வாழ்வில் நன்மை எதுவும் செய்யவில்லை என இறைவன் சொல்லமாட்டார் அல்லவா?'

'இப் பிரேதப் பேழையில் சான்ராவைப் பார்க்கையில், என் வாழ்வில் முதல் தடவையாக அன்பு என்றால் என்னவென்று உணர்கிறேன்.' அது தான் பிரதிபலன் எதிர்பாராது தன் வாழ்வைக் கொடுப்பது. இறைவன் என் வாழ்வில் நுழைந்துள்ளார்.'

இவ்வஞ்சலியின் இறுதியில் கார்லோஸ் செபித்த செபமாவது: 'இறைவா! இந்த இருமாதங்களில் என்னால் சொற்ப நன்மையாவது செய்யமுடியும் என அறிந்துள்ளேன். இன்னும் 4 மாதங்கள்தான் எனக்கு உண்டென மருத்துவர்கள் கூறுகிறார்கள். என்னை இப்போது மரணத்துக்கு உட்படுத்தாதேயும், இரண்டு அல்லது மூன்று வருடங்கள் என்னை வாழவைத்தால், சான்ரா போன்ற எயிட்ஸ் நோயாளிகட்கு உதவி செய்ய என்னை அர்ப்பணிப்பேன்.'

சில நாட்களின் பின் ஜோர்ஜ் என்ற எயிட்ஸ் நோயாளியை கார்லோஸ் அதே குருவிடம் கூட்டிவந்தான். ஜோர்ஜ் ஒரு சிறந்த ஓவியன், தனது தொழிலினால் கிடைத்த பணத்துடன் எயிட்ஸ் நோயாளிகள் சிலரைப் பராமரிக்க விரும்பினான். ஒரு சிறு வீட்டில் மூன்று எயிட்ஸ் நோயாளிகளுடன் 'ஆவியும் வாழ்வும் இல்லம்' தொடங்கப்பட்டது. இங்கு கார்லோஸ் தனது நண்பன் ஜோர்ஜ்ஜுடன் இம் மூன்று நோயாளிகளையும் பராமரித்ததுடன் வீடுகளில் உள்ள வேறு 20 நோயாளரையும் தரிசித்து ஆறுதலளித்தான். கார்லோசின் கருணை இல்லத்துக்கு மக்கள் உதவியும் கிடைத்தது,

தனது நோய்க்காக உட்கொளும் மருந்துகளை நிறுத்திவிடும் அளவுக்கு, கார்லோஸ் குணமடையத் தொடங்கினான். அவனது உடலில் நோய்க்கிருமிகள் பரவாமல் உறங்கு நிலையிலிருப்பதை மருத்துவர்கள் கண்டுபிடித்தனர். ஆயின் அதன் காரணத்தைக் கண்டுபிடிக்கஅவர்களால் முடியவில்லை. தான் அதைக் கண்டுபிடித்துவிட்டதாக கார்லோஸ் கூறினான்.

'எயிட்ஸ் நோய்க்கு சிகிச்சை பிரதிபலன் எதிர்பாராத அன்புதான். இப்போதெல்லாம் நான் என்னைப்பற்றிச் சிந்திப்பதில்லை. அதற்கு நேரமுமில்லை, பகல் முழுவதும் எயிட்ஸ் நோயாளிகளைத் தரிசித்து ஆறுதலளிக்கிறேன். இரவில் எனது அடுத்த நாளைய அலுவல்களை, சிந்தித்துத் திட்டமிடுகிறேன் என் வாழ்வில் என்றுமில்லாத மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். எனது வாழ்வின் அர்த்தம் பிறந்துவிட்டது.'

மூன்று நோயாளர் தொகை ஏழாகி, பின் பத்து ஆகியது. வெளிவாரி நோயாளர் தொகை ஐம்பதிலிருந்து எழுபது ஆகியது. பழைய வீட்டை விட்டு புதிய பெரியதொரு வீட்டுக்கு 'ஆவியும் வாழ்வும் இல்லம்' மாற்றப்பட்டது, மதபேதமின்றி, எயிட்ஸ் நோயாளர் வந்து கூடி ஆறுதல் பெறும் இடமாக அது விளங்கியது. கார்லோஸ், ஜோர்ஜ், அதிரியான் ஆகியோருக்கு உதவி செய்ய இன்னும் சில தொண்டர்களும் வந்து சேர்ந்தனர். உதவுவோர் அனைவரும் கொடுப்பதனால் பெறுகிறோம் என்ற அசிசியின் அண்ணலாரின் வார்த்தை உண்மை என உணர்ந்தனர் என்று கார்லோஸ் ஒரு கிறிஸ்மஸ் தினத்தில் கூறினான்,

கார்லோஸ் இறப்பதற்கு முந்திய சில மாதங்கள், கருணை இல்லத்தில் வெகு நேரம் தங்கி நோயாளரைப் பராமரித்ததுடன், அவனைச் சந்திக்க வரும் வெளிவாரி நோயாளருக்கு ஆறுதலும் ஆலோசனையும் அளிப்பதிலும் செலவிட்டான். பல எயிட்ஸ் கிருமிகாவிகள் அடிக்கடி வந்து தமது துன்பங்களையும் நோய்களையும் கார்லோசிடம் பகிர்ந்து ஆறுதலும் ஆலோசனையும் பெறுவர். திருப்தியுடனும் புத்துணர்வுடனும் வீடு திரும்புவர், அவ்விதம் ஆறுதல் பெற்ற இருவரின் சாட்சியங்கள் இவை:-

மார்செல்லோ:- நான் சாகவேண்டும் என்ற எண்ணத்துடன் இங்கு வந்தேன்.

(6ம் பக்கம் பார்க்க)

# வாஸ் அடிகளும் நம் வாழ்வும்

'எனவே திரண்டு வரும் மேகம் போல் இத்தனை சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து நிற்க எந்தச் சுமையையும், நம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் எந்தப் பாவத்தையும் உதறித் தள்ளிவிட்டு, நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக,' (எபிரே 12:1)

பாப்பிறை 2ம் அருள் சின்னப்பர் இங்கு வந்து யோசவ்வாஸ் அடிகளுக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் வழங்கி நான்கு வருடங்களாகிவிட்டன. தொடர்ந்து, அடிக்கடி அவரை நினைவு கூருவதும், திருப்பலி கொண்டாடுவதும், அவர் பெயரால் கலைநிகழ்ச்சிகள் நடத்துவதும், அவரின் படங்கள், சொரூபங்களை ஆங்காங்கு வைப்பதும் ஆகிய அலுவல்களுடன் நம்கடமை முடிந்துவிட்டதா?

வாஸ் அடிகளாரின் காலம்போன்று திருச்சபை இன்று தேய்பிறை நிலையில் உள்ளது. பண்டைய கத்தோலிக்க கிராமங்களான ஊர்காவற்றுறை, பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், ஊறணி, ஏழாலை, பலாலி, வசாவிளான் முதலிய பங்குத்தளங்கள் இயங்க முடியாமல் அல்லது அரைகுறையாய் இயங்குவதாக உள்ளன.

நகர்ப்புறம் நிறைந்து வருவதில் ஓர் மாயை உள்ளது சோதோம், கொமரா மக்களுக்கு இருந்த மாயை போன்றதே இது. இன்றைய நகர்ப்புறங்களில் விசுவாசம் ஆழமற்ற, அழிந்து போகும் நிலையிலேயே உள்ளது. இங்கு வாஸ் முனிந்திரன் மறைந்து, ஏழை வேடத்தில் மௌனியாகி, விசுவாச அடையாளங்களை மாத்திரமே காட்டிக்கொண்டு உண்மை விசுவாசிகளை இனம் காண அலைந்தார். ஆயின் இங்கு அவர் அதிகம் ஈடுபாடு கொள்ளவில்லை ஒல்லாந்தர் காலம்போன்று தான் இன்றும் நம் நகர்ப்புறங்களில் விசுவாசத்துக்கு சவால் விடும் சூழல் பெருகுகிறது.

(திருப்பா (35) 36:1, 3, 4)

லோத்து மாத்திரமே சோதோமில் இறை அச்சத்துடன் வாழ்ந்ததுபோல, வெகுசிலரே இன்றும் இங்கு விசுவாசத்துடன் வாழ்கின்றனர் அவர்கள் இரட்சிக்கப்பட, மிகுதியானோர் அழிந்துபோவர். வாஸ் முனிவர் கிராமங்களிலே நற்செய்தியை சுதந்திரமாக அறை கூவினார் யாழ் நகரிலும் கண்டி நகரிலும் – இங்கு மௌனியாக, அங்குசிறைவாசத்திலுமே பல மாதங்களை செலவிட்டார்'

ஆபிரகாம் சோதோமில் வாசம் செய்யவில்லை. விசுவாச வனப்பு நிறைந்த, நீர்ச்சுனையுள்ள மெம்பிறே பள்ளத்தில் வாழ்ந்ததினால், யாவே இறை தந்தையின் நண்பனாக வாழ முடிந்தது. இறை தூதர்களை வரவேற்கவும், கலந்துரையாடவும் திரித்துவ தேவனின் பிரசன்னத்தை அனுபவிக்கவும் முடிந்தது.

(தொட. 15ம் 18ம் அதி)

பாத்திமா காட்சிகளில் தேவதாய் ஊக்குவிப்பதும் மௌனம், செபம், தபம், பரித்தியாகம் என்பவையே. மெம்பிறே பள்ளத்தாக்கு வாழ்க்கையையே நாம் எம் வாழ்வில் உருவாக்க வேண்டும் வாஸ் முனிந்திரரின் விழாவில் (1998 ஜனவரி 16) இதற்கான தீர்மானத்தை எடுத்து, தொடர்ந்து செயற்படுவோமாக.

'பரிசேயர், சதுசேயருள் பலர் தம்மிடம் திருமுழுக்குப் பெற வருவதைக் கண்டு அவர் அவர்களை நோக்கி, 'விரியன் பாம்புக்குட்டிகளே, வரப்போகும் சினத்திலிருந்து தப்பிக்க இயலும் என உங்களிடம் சொன்னவர் யார்?' என்றார். (மத். 3:7)

---

**அன்புடையார்.**

(3ம் பக்க தொடர்)

கார்லோசுடன் கதைத்தபின், வாழ வேண்டும் என முடிவுசெய்து, அவரைப் போல என்வாழ்வில் புதிய அர்த்தத்தையும் அத்தியாயத்தையும் தொடங்கிச் செல்கிறேன்.

வால்டர்:– (ஆவியும் வாழ்வும் இல்லத்தாதி) இங்கு வந்தபோது என் வாழ்வை முடித்துவிட எண்ணினேன். இப்போது எனக்கு மரணபயம் இல்லை. என் வாழ்வைச் சுவைக்கத் தொடங்கியுள்ளேன்.

ஒருநாள் கார்லோஸ், மில்ரன் என்ற நோயாளியைத் தனது கரங்களால் தூக்கிக்கொண்டு வரவேண்டியிருந்தது. இது அவனது கால்களில் வலுக்கேடு ஏற்படுத்தியது அவன் மருந்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டான் அங்கு கொடுக்கப்பட்ட மருந்துகள் அவனது பழைய வருத்தத்தை (கார்போசி சார்கோமா) தோற்றுவித்தன. எந்தவித சிகிச்சையும் பயனளிக்கவில்லை.

சிறிது குணமடைந்த நிலையில் வீடு திரும்பினாலும் முன்போல், நோயாளர் பராமரிப்புப் பணியில் ஈடுபட்டாலும், 'சார்கோமா' தன் உடலை சிறிதுசிறிதாக அரித்துத் தள்ளுவதை, கார்லோஸ் உணர்ந்தான். ஆயினும் அமைதியாகவும் சலனமற்றும் காணப்பட்டான் சான்ராவின் இறுதிச் சடங்குகளின் போது, ஆண்டவரிடம் கேட்டுக்கொண்டது போல, சரியாக மூன்று வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்தான். அம்மூன்று ஆண்டுகளும் அவனது வாழ்வின் பொற்காலம் ஆகும்,

கார்லோஸ் இறுதியாகத் தன் கண்களை மூடுமுன் டானியேல் சிமிற்றான் குருவிடம், 'சுவாமி! நான் இறந்தபின் இந்த இல்லத்தை இழுத்து மூடிவிடக் கூடாது. அவ்விதம் நடந்தால், நான் வந்து உங்கள் காலைப் பிடித்து இழுப்பேன்' என நகைச்சுவையாகக் கூறினான் இன்றும் தென்னமெரிக்காவில் பிறேசில் நாட்டில் சாவோபாலே பகுதியில் 'ஆவியும் வாழ்வும் இல்லம் 'எயிட்ஸ் நோயாளிகட்கு பராமரிப்பும் ஆறுதலும் ஆலோசனையும் அளித்துக்கொண்டிருக்கிறது,

யுவனல் என்ற 31 வயதான மாணவன் மெய்யியற் கல்வியில் பட்டம் பெற்றபின், குருவாகத் திருநிலைப்படுத்தப்படுவதற்கு ஆயத்தங்கள் செய்துகொண்டிருக்கையில் எயிட்ஸ் நோய் அவனைப் பீடித்தது எனவே மனமுடைந்த நிலையில், தன் வீட்டுக்குச் செல்லாது கார்லோசின் கருணை இல்லத்தை நாடினான். தான் இழந்த நம்பிக்கையை அங்கு யேசுவில் கண்டான்.

கார்லோஸ், யுவனலை தனது இல்லத்தின் செயலாளர் ஆக்கினான். சிறிது சிறிதாக யுவனல் எயிட்ஸ் நோயாளர் பராமரிப்பில் தேர்ச்சி பெற்றுக்கொண்டவன், இன்று கருணை இல்லத்தின் பொறுப்புகளை ஏற்று டானியேல் சிமிற்றான் அடிகளின் மேற்பார்வையில் திறம்பட நடாத்துகிறான். லூயிட், றீவ், சிட்ணி ஆகியோர் உதவியாளராகச் செயலாற்றுகிறார்கள்.

சிட்ணி தனது பதினோராவது வயதில் அனாதையாக, பராமரிப்போரின்றி, வீதிகளில் அலைந்து திரிந்தபோது கார்லோஸ் அவனைத் தனது கருணை இல்லத்துக்கு அழைத்துவந்து அன்புடன் ஆதரித்தான். சிட்ணி, எயிட்ஸ் நோயாளி அல்ல. நோயாளரை அன்போடு பராமரிக்கக் கற்றுக்கொண்டான்.

(6ம் பக்கம் பார்க்க)

# தேவதாயின் அற்புத வரலாறு (தொடர்ச்சி)

தேவதாயை ஜெயிப்பதற்கு லூசிப்பசாசு உபாயங்களைச் செய்வதை அறிந்திருந்த மாம்ஸமாயின வார்த்தையானவர் தமது திருத்தாயாரின் வயிற்றில் எழுந்து நின்றுகொண்டு அத்தருணத்தில் அவளுக்கு சகாயம் பண்ணப் பரமபிதாவை வேண்டிக்கொண்டார். லூசிப்பசாசு ஏழுதலையான பாவங்களுக்குத் தலைவர்களாகிய ஏழு கூட்டம் பசாசுகளையும் கூட்டிக்கொண்டு வர தேவமாதா அப்பொழுது தியானத்திலிருந்ததைக் கண்டு இந்த ஏழு கூட்டங்களும் ஒன்றின்பின்னொன்று அவளைத் தந்திரம் பண்ணிக்கொண்டு வந்தன. அவள் தம்முடைய ஞானத்தினாலேயும் செபத்தினாலேயும் அவைகளைஜெயிக்க, லூசிப்பசாசு மெத்தக் கோபங்கொண்டு உலகத்திலே அக்கிரமங்களை விளைவித்துப் பற்பல மதங்களையேற்படுத்தி தன் பலமெல்லாங் கொண்டு ஞானப்போர் செய்யத் தலைப்பட்டு அண்டை வீட்டார்களையும் அவள்மேல் எதிர்க்கப் பண்ணிற்று. அப்போது அவள் சுவாமியினுடைய பலம் கொண்டு லூசியை ஜெயித்து விட்டாள்.

ஆனால் பின் சொல்லப்படப்போகிற தந்திரமானது அவளுக்கு மெத்த உபத்திரவத்தைத் தந்தது. சூசையப்பர் தேவமாதா கர்ப்பிணியாய் இருப்பதைக் கண்டு கலங்கி கஸ்திப்பட்டு அவள் முறைமைப் பிரகாரம் கல்லெறிந்து கொல்லப்படுவாளென்று நினைத்து துக்கசாகரத்தில் ஆழ்ந்திருந்தார். அவர் மெத்த விரதத்துவமான புண்ணியங்களைச் செய்து இடைவிடாத செபத்தினாலே தமக்கு வந்த கஸ்தியை நீக்க வேண்டுமென மன்றாடினார். தமது கண்கள் தம்மை மோசம்பண்ணுதென்று நினைத்து தமது பேரிலேயே சலிப்புக் கொண்டார். ஆனால் தேவமாதா ஐந்து மாதம் கெர்ப்பஸ்திரீயாய் இருக்கிறபடியால் கெர்ப்பத்தின் அடையாளம் தெளிவாயிருந்தது. இதனை நன்றாயறிந்திருந்து வாக்குக்கெட்டாத துன்பத்தை அடைந்திருந்தார்

இவர் படும் துன்பங்களையெல்லாம் தேவமாதா நன்றாயறிந்திருந்தாலும் தம்மில் நடக்கின்ற பரமவிரகசியத்தை வெளிவிடாமல் சுவாமியே அவருக்குத் தெரிவிக்கிறவரையிலே காத்துக் கொண்டிருந்தாள்.

சூசையப்பர் தேவமாதாவை விட்டுத் தாம் நீங்கிப் போகத் தீர்மானம் செய்து கொண்டு இராத்திரியிலே ஓர் சிறிய மூட்டையைக் கட்டிக் கொண்டும் கொஞ்சம் பணமெடுத்துக் கொண்டும் ஜெருசலேம் பட்டணத்துத் தேவாலயத்துக்குப் போகப் பாதிசாமத்தில் புறப்படத் தீர்மானித்து செபம் பண்ணி கொஞ்சம் நித்திரை செய்யப் போனார். இதையெல்லாம் தேவமாதா தமது ஞானத்தினால் பார்த்துக் கொண்டேயிருந்து, அவர் தம்மை விட்டு நீங்குகிறதினிமித்தமும் அவர் படும் கஸ்தியினிமித்தமும் சுவாமியைப் பார்த்து மிகவும் உருக்கமாகச் செபம் செய்தாள். சுவாமியானவர் கபிரியேலென்னும் சம்மனசை அனுப்பி சூசையப்பருடைய சந்தேகத்தைத் தீர்த்துப் போட்டார். சூசையப்பர் தான் கொண்ட சந்தேகத்திற்காக சுவாமியிடம் மன்னிப்புக் கேட்டார். அப்போது தேவமாதா உயர்ந்த பரவசத்தில் இருந்தபடியினாலே சற்று நேரம் காத்திருந்து அவளைப் போய்க் கண்டு 'இனி நான் உன் தாசன் நீ என் இராக்கினி' என்று அவள் பாதத்தில் விழுந்தவுடனே, தேவமாதா தமது பத்தாவைத் தூக்கி அவர் பாதத்தில் தான் விழுந்து தெய்வ பரமவிரகசியத்தை மறைக்கத் தமக்கிருந்த நியாயங்களைச் சொல்லிக் காட்டி' முன் போல நீர் எனக்குக் கட்டளையிடவும் நான் அதற்குக் கீழ்ப்படியவும் வேண்டும்' என்றாள்.

இந்த வார்த்தையைச் சொல்லும் போது தேவமாதா ஆச்சரியமான பிரகாசத்தினால் சூழப்பட்டாள். சூசையப்பர் இஸ்பிரீத்து சாந்துவினால் நிறையப்பட்டு இவள்தான் ஸ்நாபக அருளப்பரை அர்ச்சிக்க கருவியாயிருந்தாள் என்றும் தாம் பெற்றுக்கொண்ட எண்ணிலடங்காத வரங்களுக்குக் காரணமாயிருந்தாளென்றும் கண்டு பிடித்தார். பின் இவளுக்கு முழங்காற் படியிட்டு சங்கை செய்யவும், பெருக்கிறது சமைக்கிறது முதலான வீட்டுவேலைகளையும் செய்யத் தலைப்பட்டார், தாழ்ச்சியுள்ள கன்னிகை இப்படிச் செய்ய வேண்டாமென்று அவரை வேண்டிக் கொள்ள இவர் முழங்காற் படியிட்டு வணங்குவதை மாத்திரம் விட்டுவிட்டு வேலைகளைத் தாமே செய்து வந்தார். இந்த அர்ச்சியசிஷ்டவர்களுடைய வீட்டிலே மூன்று சின்ன அறைகள் மாத்திரமிருந்தன. அவைகளில் ஒன்றிலே தேவமாதா வசிக்கிறது, வேறொன்றிலே சூசையப்பர் வசிக்கிறது; மற்றொன்றிலே சூசையப்பர் வேலை செய்கிறது. இவர்களுக்கு ஊழியர்கள் இல்லவேயில்லை. தேவமாதா பெரிய அவசரமின்றி வெளியே புறப்படுகிறதில்லை. வெளியிற் போகவேண்டியிருக்கும்போது தமது அண்டைவீட்டாளாகிய பக்தியுள்ள ஓர் பெண்ணை அழைத்துப் போவாள். அந்த ஸ்திரி தனக்கும் தனது குடும்பத்துக்கும் வெகு சகாயங்களைப் பெற்றுக்கொண்டாள்.

பலவேளைகளில் சூசையப்பருக்கு வேலை கிடைக்காதபோது இவர்கள் மிகவும் பொறுமையாய் இருந்தபின் பட்சிகள் அப்பங்களையும் பழங்களையும் கொண்டுவந்து கொடுக்கும். சிலவேளை சம்மனசுகள் கொண்டுவந்து கொடுப்பார்கள். சிலவேளை எலிசபேத்தம்மாள் ஏதாவது அனுப்புவாள். தேவமாதாவினுடைய படுக்கை ஓர் சிறு பலகைதான். அவள் உயிர் நிற்கக் கொஞ்சம் நித்திரை மாத்திரம் செய்வாள். சூசையப்பர் அவள் நித்திரை செய்ததை பார்த்ததேயில்லை. தேவமாதா பரிசுத்தமுடையவளாகையால் அவள் மடத்திலிருந்து போட்டுக் கொண்டு வந்த அங்கி அற்ப அழுக்கு முதலாய்க் கொள்ளவில்லை. அவள் அதை ஒருக்காலும் மாற்றியவளல்ல. மாசுகொண்ட பெண்களுக்கு சம்பவிக்கும் காரியங்களும் வியர்வை முதலானவையும் அவளுக்குண்டாயிருந்ததில்லை. அவள் சாப்பிடுவது மிகவும் கொஞ்சம். அவள் மாமிஸம் சாப்பிட்டதேயில்லை அப்பம், கனிகள், கீரைகள், மச்சங்கள் முதலியவைகளைத்தான் சாப்பிடுவாள். சூசையப்பர் வேலைக்குப் போகவேண்டியிருப்பதால் சிலவேளை அவருக்கு மாத்திரம் கொஞ்சம் மாமிஸம் சமைப்பாள். கர்த்தர் பிறக்கிற நாள் சமீபித்திருப்பதைக் கண்டு தாயே முழங்காலில் இருந்துகொண்டு உத்தமமான தியானத்தினால் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து கொண்டு தமது திருக்கையால் நூல் நூர்த்து நெய்து குழந்தை யேசுவுக்கு சிறு உடுப்புக்களைச் செய்தாள். சூசையப்பர் பறித்துக்கொண்டு வந்த வாசனைப் புற்களினால் செய்த பன்னீரை அவைகளின் மேல் தெளித்துப் பத்திரப்படுத்தினாள். முன்னையைப் பார்க்க அதிக மதுரமான புண்ணியங்களையும் உன்னத தியானங்களையும் செய்வாள். செபம் செய்யும்போது சாஷ்டாங்கமாக விழுந்து சிலுவையடையாளமாய்க் கையை விரித்துக் கொண்டு செபம் செய்வாள். ஏனென்றால் தமது குமாரன் இப்படி சிலுவையில் மரிப்பாரென்று காண்பித்தாள். (வளரும்)

### ஒன்றிணைக்கும்..

(1ம் பக்கத் தொடர்)

கள் நானூறு ஆகியதும் இலங்கையில் தமிழ் மண்ணில் நாற்பது ஆகியதும் ஏன் என்று சிந்திக்கப்பட வேண்டியது.

ஆவியே பிரிக்கிறாரா? சுத்திகரிக்கிறாரா? இரத்தமே பிரிக்கிறதா? அவர் திருமேனியின் அவதார காயங்கள் புரையோடுகின்றனவா? அல்லது காயங்கள் ஆறி பிரகாசமிக்க தழும்புகளாகின்றனவா? அவர் சிலுவையில் சிந்திய இரத்தத்தினால் சமாதானம் உண்டாக்கி, அவர் ஆசித்த இரத்த முழுக்குக்கு, சபைகள் வாஞ்சையுடன் ஏங்குகின்றனவா என்பதிலேயே 2000ம் ஆண்டு கிறிஸ்தவ ஐக்கியம் தங்கியிருக்கும்.

'வேற்றினத்தார் சீறி எழுவதேன்? மக்களினங்கள் வீணாகச் சூழ்ச்சி செய்வதேன்? ஆண்டவருக்கும் அவர்தம் அருள்பொழிவு பெற்றவர்க்கும் எதிராகப் பூவுலகின் அரசர்கள் அணிவகுத்து நிற்கின்றார்கள். ஆள்வோர் ஒன்றுகூடிச் சதி செய்கின்றார்கள்.' (திருப்பா 2:1,2)

வெளியே சிலுவையின் எதிர்ச்சக்திகள் ஒன்று திரள்கின்றன. அந்திக் கிறிஸ்துகள் பலுகிப் பெருகுகின்றனர்.

ஒருவர் ஒருவரைப் பகைத்து, குறைகூறி சேறு எறிந்து, 144000 பேர் கொண்ட பட்டியலில் தாங்கள் மாத்திரமே தகுதியானோர் எனப் பாகம் பிரிப்பதில் நேரத்தை வீணே செலவிடாது, சிலுவையின் பின் ஒன்றுதிரண்டு, ஒருவரை ஒருவர் மன்னித்து, அன்புசெய்து அரவணைப்போமாக.

இயேசு இறைமகன் என்று நம்புவோரைத் தவிர உலகை வெல்வோர் யார்? நீராலும் இரத்தத்தாலும் வந்தவர் இயேசுக்கிறிஸ்து. அவர் நீரால் மட்டுமல்ல' இரத்தத்தாலும் வந்தவரென. தூய ஆவியானவர் சான்று பகர்கிறார், தூய ஆவியாரே உண்மை.

(1 யோவா 5:5,6)

### மனச்சாட்சியின்..

(2ம் பக்கத் தொடர்)

இவரது கூற்று அவரது இறைபணியின் மன உறுதியை எடுத்துக்காட்டுகிறது.

1983ல் மீண்டும் கைதுசெய்யப்பட்ட பிரான்சிஸ் அடிகளுக்கு நீதிமன்றம் மேலும் 12 வருட கடுழிய சிறைத்தண்டனை விதித்தது. இதன்மூலம் அடிகளை அனைத்துலகுக்கும் காட்டாது மறைத்துவிட அரசு எண்ணியது. ஆயின் இறைவனின் எண்ணமோ வேறாயிருந்தது. இந்த உத்தம பணியாளனுக்கு சம்பாவனை அளிப்பது ஆண்டவனின் சித்தமாயிருந்தது.

1983 டிசம்பர் 28ல் பிரான்சிஸ் சூரெக் அடிகளை மாரடைப்பு நோய் பீடித்தது. அன்று தினம் திருச்சபை மாசற்ற குழந்தைகளின் திருநாளைக் கொண்டாடியது. ஆம் இந்த இறை பணியாளனும் மாசற்ற குழந்தையாகவே மரணமானார். தமது 71 வருட வாழ்வில் 33 ஆண்டுகளை அவர் சிறைவாசத்திலும் சித்திரவதை அனுபவிப்பதிலுமே செலவிட்டிருந்தார்.

மனிதனது தீர்ப்புகள், இறைவனது தீர்ப்புகளிலிருந்து முற்றாக மாறுபட்டவை. மனித கண்களுக்கு குற்றவாளிகளாயிருப்போர் இறைவன் முன்னணியில் மிகத் தூயவர்களாயிருப்பர்.' பிரான்சிஸ் சேவியர் சூரெக் அடிகளார் மட்டிலும் இக்கூற்றுகள் பொருத்தமானவை.

இவரது சகாக்களுக்கும் சீனத் திருச்பபைக்கும் இவரது இழப்பு வருந்தத்தக்கதெனினும் இவர் மட்டில் அவர்கள் மகிழ்ச்சியும் பெருமையும் அடைய முடியும். ஏனெனில் எல்லோருக்கும் கிடைக்காத 'விசுவாசத்துக்காகத் துன்புறுதல்' இவருக்குக் கிடைத்தது. சூரெக் அடிகள் திருச்சபைக்கு இந்த 20ம் நூற்றாண்டின் மணிமுடியாகத் திகழ்கிறார் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

'அவரில் நம்பிக்கை வைக்கிறவர்கள் உண்மையைக் கண்டுபிடிப்பார்கள். விசுவாசம் கொண்டவர்கள் அவரோடு அன்பில் நிலைத்திருப்பார்கள். ஏனெனில் அருளும் இரக்கமும் அவரால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களுக்கே உரியவை.' (ஞானாகமம் 3:9) என்ற வார்த்தைகளில் நம்பிக்கை வைக்க பிரான்சிஸ் சேவியர் சூரெக் அடிகளது வாழ்வு எம்மைத் தூண்டுகிறது.

## சூரெக் அடிகள் சிந்தனை நூல்களிலிருந்து...

- 'என்னோடு எல்லாமாக ஆறுபேர் கடுழிய தண்டனை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம். எமது நிலை பரிதாபத்துக்குரியதாயிருந்தது. அங்கு எமக்கு வேதனையும் வேலையும் தவிர வேறு எதுவும் கிடையாத நிலையில் ஒருவர் ஒருவரை அன்பு செய்தோம். ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தோம். ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தினோம். ஒருவருக் கொருவர் வழிகாட்டினோம். உடலின் கைகளுக்கும் கால்களுக்கும் உள்ள உறவே எம்மிடையிலும் இருந்தது. வற்றாத அன்புள்ள இறைதந்தை எம்மைப் பார்த்து மனத்திருப்தியுடன் புன்னகை புரிந்திருப்பார்.'
- 'உன் எதிர்காலத்தை இறைவனிடம் விட்டுவிடு, அவரை மட்டுமே நாம் முழுமையாக நம்ப முடியும்.'
- எல்லாவற்றிலும் இறைவன்மீதே நம்பிக்கை வை. அவர் உனக்கு அனுப்புவதெல்லாம் நன்மைக்கே.'
- நீ கவலைப்படத் தேவையில்லை. ஆர்வமாகச் செபம்செய் ஏனெனில் எமது தேவைகட்காக செபிக்கும்படி அவர் கூறியிருக்கிறார்,'
- 'உலகெங்கும் சிலுவை உண்டு, சீனாவில் மட்டுமல்ல நண்பா. உனது சிலுவையை விருப்புடன் சுமந்து இயேசுபின் செல். அவரது சித்தத்தையே எல்லாவற்றிலும் தேடி வாழ்.'

### அன்புடையார்..

(4ம் பக்கத் தொடர்)

இன்று இவ்வில்லத்தில் பிரதான பங்கு வகிக்கும் இப்பதினான்கு வயதுச் சிறுவன், பாடசாலைகளிலும் கூட்டங்களிலும் எயிட்ஸ் கொல்லிபற்றி உரையாற்றுகிறான். கார்லோஸ் செய்தபுதுமை இது.

'உன் வாழ்வை பிரதிபலன் எதிர்பாராது கொடு' என்பதே ஆவியும் வாழ்வும் இல்ல விருதுவாக்கியம். இதுவே இறை தந்தைபற்றி கார்லோஸ் பெற்ற அனுபவம், மிசனரி ஆர்வத்துடன் தன்னைப்பற்றிச் சிந்தியாது. சான்ராவுக்கும் இறையேசுவுக்கும் தன் வாழ்வை இலவசமாக கொடுத்தான், இறை தந்தை அவனது உடலை, ஆன்ம காயங்களை தொட்டுக் குணமாக்கினார்.

இவ் வகையில்தான் கார்லோஸ் இறை தந்தையின் அன்பைக் கண்டு; ஏழைகளுக்கும் கைவிடப்பட்டோருக்கும் வாழ்வின் அடையாளமும் நம்பிக்கையுமானான். சமூகத்தினால் வெளியே தள்ளப்பட்டோர், யேசுவின் நற்செய்தியை எமக்கு வாழப் பழக்குகின்றனர். இறைவனைச் சந்திக்கும் அருட்சாதனங்களாகின்றன. புறக்கணிக்கப்பட்டோர் வெளியே தள்ளப்பட்டோரிடமிருந்தே எமக்கு நம்பிக்கை உண்டாகிறது.

Print : Annai printers, Jaffna.
Published by PAX CHRISTI,
St JOSEPHS ASHRAM,
102, Main Street, Jaffna.